**R 4757 (page 42)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# எலியாவுக்குப் பின் எலிசா

# ELISHA SUCCESSOR TO ELIJAH

**2 இராஜாக்கள் 4:25-37**

## எலிசா நிழலாக இருக்கின்றார்

எலியா எடுத்துக்கொள்ளப்பட்ட சம்பவத்திற்குப் பிற்பாடு, எலியாவைப்போன்று எலிசாவும் ஓர் உறுதியான மற்றும் நிழலான பாத்திரமாய்க் காணப்படுகின்றார் என்று நாம் கருதுகையில், எலிசாவின் அனுபவங்கள் மீதான நமது ஆவல் அதிகரிக்கின்றது. எலியா மற்றும் நிஜமான ஆசாரியர்களுக்கு இடையிலும், எலிசா மற்றும் சுவிசேஷ யுக நிஜமான லேவியர்களுக்கு இடையிலும் உள்ள ஒற்றுமையைக்குறித்து, நாங்கள் ஏற்கெனவே தெரிவித்திருந்தோம். எலிசா முற்பிதாக்களுக்கும்கூட நிழலாய்க் காணப்படலாம்; மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில், உலகத்திற்குப் போதிக்கும் காரியமும், உலகை ஆசீர்வதிக்கும் காரியமும் இந்த முற்பிதாக்களின் கரங்களிலேயே வைக்கப்படும்; இவர்கள் "பூமியெங்கும் பிரபுக்களாகக் காணப்படுவார்கள்." இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில் எலிசா ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இரண்டாம் வகுப்பாருக்கு முதலாவதாக நிழலாய்க் காணப்படுகின்றார் எனவும், இவர் யோர்தானைக் கடந்துசெல்வது என்பது, நிஜமான லேவியர்களாகிய இவ்வகுப்பாரின் மரணத்தினையும் அடையாளப்படுத்துகின்றது எனவும் நாம் கருதலாம். இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில் எலிசாவின் பிந்தைய காரியமும், அவரது நியாயத்தீர்ப்பின் வேலையும், சீர்த்திருத்த வேலையும், "பிரபுக்களின்கீழ்" மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகையில், சம்பவிக்குமென நாம் எதிர்ப்பார்த்திடும் விஷயங்களுக்கு நன்கு ஒத்திருக்கின்றது. நீரூற்றை ஆரோக்கியமடையப்பண்ணுவது என்பது, சத்தியத்தின் நீரூற்று ஆரோக்கியமடையும் காரியத்தை அடையாளப்படுத்துகின்றது. பல நூற்றாண்டுகள் காலமாக, "நீ சாகவே சாவதில்லை" எனும் சாத்தானுடைய மகா பொய்யோடுகூட, தவறான உபதேசங்களும், மூடநம்பிக்கைகளும் சேர்ந்து, சத்தியம் எனும் தண்ணீரை கடுப்புத்தன்மையுடையதாக, சுவையற்றதாக, ஆரோக்கியமற்றதாக ஆக்கிவிட்டது. நீரூற்றில் உப்பு போடப்படும் காரியமானது, இப்பொழுது "பூமியின் உப்பு" என்று அழைக்கப்படும் சபை மகிமையடையும்போது, இந்த மகிமையடைந்த சபையின் ஒத்துழைப்புடன் அசத்தியமும், தவறான

**R4758 : page 43**

உபதேசங்களும் சுத்திகரிக்கப்படுவதை அடையாளமாய்ச் சித்தரிக்கின்றது. சத்தியம் எனும் நீரூற்று ஆரோக்கியமடைதல் என்பது, முற்பிதாக்கள் மூலமாய்க் கடந்துவரும் புது உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியாக இருப்பினும், அது மகிமையடைந்த சபையிடமிருந்தே கடந்துவரும் ஒன்றாகும்; இது பிற்பாடு யூதர்கள் வாயிலாக மனுக்குலத்தின் உலகத்திற்குப் போகும். இதைத்தான் பரிசுத்த பவுல் அடிகளார் உரோமர் 11:25-33 வரையிலான வசனங்களில் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றார்.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

மரித்தோரை ஜீவனுக்குக் கொண்டுவரும் காரியமானது, புதிய யுகத்தினுடைய - அதாவது மேசியாவின் இராஜ்யத்தினுடைய மாபெரும் அம்சங்களில் ஒன்றாய் இருக்கப்போகின்றது. இந்த வல்லமையானது சந்தேகத்திற்கிடமின்றி அக்காலத்தின் "பிரபுக்களின்" வாயிலாகச் செயல்முறை படுத்தப்படும் என்பது எலிசாவினால் நிழலாய்க் காண்பிக்கப்பட்டுள்ளது என்று நாங்கள் நம்புகின்றோம். தீர்க்கத்தரிசியினுடைய சௌகரியத்திற்கென்று அன்பான ஏற்பாடுகளைப் பண்ணினவர்களும், மரணத்தினின்று எலிசாவினால் உயிர்த்தெழுப்பப்பட்ட அந்தப் பிள்ளையுடைய பெற்றோர்களுமானவர்களின்

விஷயம்போலவே, எலிசாவினால் அடையாளப்படுத்தப்படும் "பிரபுக்களை" முற்றும் முழுமையாய் மதிக்கின்றவர்களும், அவர்களை ஏற்றுக்கொள்பவர்களுமே, அதிகமாய்க் கிருபை பெறப்போகின்றவர்களாய் இருப்பார்கள்.

---------------------------